ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1898/46 - 2015 ජනවාරි මස 22 වැනි බ්‍රහස්පතින්දා - 2015.01.22
*1898/46 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி வியாழக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

***2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் கீழ் சொரணாதொட்டை பிரதேச சபையின் தவிசாளர் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்***

கேட்டு விலகல் காரணமாக சொரணாதொட்டை பிரதேச சபையின் தவிசாளரது பதவி வெற்றிடமாகியுள்ளதாதலாலும்;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) ஆம் பிரிவின் கீழ், மனமேந்திர பட்டபெதிகே லிலசேன என்னும் பதவி வகித்த தவிசாளர் அங்கத்துவம் வகித்த அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான சொரணாதொட்டை பிரதேச சபையின் தவிசாளர் தொடர்பாகத் தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் , அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்காக பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவிக்கவில்லையாதலாலும் ;

இப்போது சொரணாதொட்டை பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் ரத்நாயக ராலலாகே அசங்க சதிஸ் குமார ரத்நாயக ஆகிய நான், 2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, 2011, மாச்சு மாதம் 17 ஆந் திகதி சொரணாதொட்டை பிரதேச சபைக்காக நடாத்தப்பட்ட தேர்தலில், அதற்கடுத்ததாக அதிகூடுதலான விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ள திரு. விஜேரத்ன கமகே நீல் பிரேமதிலக அவ்வெற்றிடம் ஏற்பட்டுள்ள சொரணாதொட்டை பிரதேச சபையின் தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

அசங்க ரத்நாயக,
தெரிவத்தாட்சி அலுவலர்,
சொரணாதொட்டை பிரதேச சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
பதுளை,
2015, சனவரி 20.

2 - 164

இவ் அதிவிசேட வர்த்தமானியை *www.documents.gov.lk* எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ், சொரணாதொட்டை பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

கேட்டுவிலகல் காரணமாக சொரணாதொட்டை பிரதேச சபையின் உறுப்பினரொருவரது பதவி வெற்றிடமாகியுள்ளதாதலாலும் ;

மனமேந்திர பட்டபெதிகே லீலசேன என்னும் பதவி வகித்த உறுப்பினர் அங்கத்துவம் வகித்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டிய அக்கட்சியைச் சேர்ந்தவரும் சொரணாதொட்டை பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர் குறிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65அ (2) என்னும் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், குறிப்பிட்ட காலத்தில் தனது முடிவைத் தெரிவிக்காததாலும் ;

இப்போது சொரணாதொட்டை பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் ரத்நாயக ராலலாகே அசங்க சதிஸ் குமார ரத்நாயக ஆகிய நான், 2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தி அமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, 2011, மாச்சு மாதம் 17 ஆம் திகதி சொரணாதொட்டை பிரதேச சபைக்காக நடாத்தப்பட்ட தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட கடைசி உறுப்பினருக்கு அடுத்ததாக அதிகப்படியான விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ள திரு. ஆர் . எம். குமாரசேகர என்பவர் அவ்வெற்றிடம் ஏற்பட்டுள்ள சொரணாதொட்டை பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

அசங்க ரத்நாயக,
தெரிவத்தாட்சி அலுவலர்,
சொரணாதொட்டை பிரதேச சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
பதுளை,
2015, சனவரி 20.

2 - 165

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.